**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (21.3.2018) சட்டப்பேரவையில், காவேரி மேலாண்மை வாரியம் அமைத்திட மத்திய அரசிற்கு தமிழ்நாடு அரசு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறது என்று விளக்கம் அளித்தார்கள்.**

---

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே,

இந்த கதை உங்களுக்கு பொருந்துமா அல்லது எங்களுக்கு பொருந்துமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஏன் என்று சொன்னால், நீங்கள் ஐந்து ஆண்டு காலம் மத்தியில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் இருக்கின்ற போது, ஆட்சி அதிகாரத்தை அனுபவித்தீர்கள். அதனால்தான், அந்த கதையை நன்றாக தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். எங்களை பொருத்தவரைக்கும், நாங்கள் எந்த கூட்டணியும் அமைக்கவில்லை, அவர்களுக்கு ஆதரவும் தரவில்லை. தமிழகத்தினுடைய நிலைப்பாட்டை தான் உரிய முறையிலே நாம் முன்னெடுத்து வைத்து கொண்டு இருக்கின்றோம். தமிழ்நாட்டு மக்களுக்காக வாதாடிக் கொண்டு இருக்கின்றோம். இதுவரை தமிழக வரலாறு காணாத வகையில், இந்த நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்தி இதுவரை முடக்கப்பட்டு இருக்கிறது.

தமிழகத்தினுடைய ஜீவாதார உரிமையை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவும், காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி ஆறு வார காலத்திற்குள் அமைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி தொடர்ந்து நாடாளுமன்றத்திலே அழுத்தம் கொடுத்து, நாடாளுமன்றத்தை முடக்கி கொண்டு இருக்கின்றோம். எந்த அளவிற்கு நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழக மக்களுடைய எண்ணங்களை பிரதிபலிக்கின்ற அரசாக அம்மாவினுடைய அரசு இருக்கும் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே,

மொட்டை தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட வேண்டாம். எங்களுக்கு நன்றாக தெரியும். நீங்கள் அனுபவம் வாய்ந்தவர். வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல நீங்கள் ஏற்றுவீர்கள் என்று எங்களுக்கு நன்றாக தெரியும். இது அவர்களுடைய ஆந்திரா பிரச்சனைக்காக கொண்டு வருகிறார்கள். நேற்றைய தினமே மாண்புமிகு துணை முதலமைச்சர் விளக்கமாக சொல்லி இருக்கின்றார். அவர்கள் கூட்டணி வைத்து போட்டியிட்டார்கள். பாரதிய ஜனதாவோடு தெலுங்கு தேசம் கூட்டணி அமைத்து போட்டியிட்டு வெற்றி பெற்று, அமைச்சரவையிலே இடம் பெற்றிருந்தார்கள். அவர்களது கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்பதற்காக, அவர்கள் நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வருகிறார்கள். நம்முடையது அப்படியல்ல. காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்பதற்காக நாம் குரல் கொடுத்து கொண்டு இருக்கின்றோம். அதற்கு யாருமே குரல் கொடுக்கவில்லையே, யாருமே சப்போர்ட் செய்யவில்லையே. அவர்களுடைய பிரச்சனைக்காக தான் அவர்கள் குரல் கொடுக்கிறார்களே ஒழிய, நம்முடைய பிரச்சனையை சுட்டிக்காட்டவில்லை. ஆகவே, நம்முடைய பிரச்சனைக்கு, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து நாடாளுமன்றத்திலே குரல் கொடுத்து, அழுத்தம் கொடுத்து கொண்டிருக்கிறார்கள், நாடாளுமன்றமும் தொடர்ந்து முடங்கக்கூடிய அளவிற்கு நாம் அழுத்தம் கொடுத்து கொண்டு இருக்கின்றோம் என்பதை தங்கள் வாயிலாக எதிர்க்கட்சி துணை தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**